**தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின 6(1)(ஈ) 38 3பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பரமாணம் 571 | மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்குகள் 3 இல் 280 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்த ரூபா 15,285,438 பெறுமதியான மீதிகள் தொடர்பில் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வைப்பு மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியமை. | இது தொடர்பில் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலமாக மற்றும் நிதி அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வு முகாமைத்துவக் குழுவில் இது தொடர்பில் கலந்துரையாடப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி திட்டத்தின் பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதி ரூபா 14,721,985,000 ஆக காணப்பட்டதுடன், கோரப்பட்ட கட்டுநிதி ரூபா 13,840,349,559 ஆகும். அவ்வாறான போதிலும், கோரிக்கை விடுக்கப்பட்ட கட்டுநிதிகள் மீளாய்வாண்டின் போது ரூபா 6,776,120,000 அல்லது 49 சதவீதம் மாத்திரம் கிடைத்திருந்தது. இதன் காரணமாக மாவட்டச் செயலகத்தின் செயலாற்றல் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்ற முடியாதிருந்தது. | கட்டுநிதிப் பணத்தினை உச்ச அளவில் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | • கட்டுநிதி திட்டமிடல் மற்றும் கோரிக்கை விடுத்தல் மற்றும் உரிய தேவையை பூர்த்தி செய்வதற்காக திறைசேரியிலிருந்து பணம் கிடைக்கும் வரையிலும் கோரிக்கை விடுத்தல் அல்லது மீண்டும் கோரிக்கை விடுத்தல் இடம்பெறும். இதன் போது உதாரணமாக மாவட்டச் செயலகத்தின் புதிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ஆண்டினுள் பல சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த கட்டுநிதியான ரூபா 835 மில்லியனைப் பெற்றுக்கொள்வதற்காக மார்ச் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா 1,856 மில்லியன் கட்டுநிதி கோரப்பட்டது.<br><br>• கோரிக்கை விடுக்கப்பட்ட மொத்த கட்டுநிதி தேவைப்பாடான ரூபா 13,840 மில்லியன் மாவட்டச் செயலகத்தின புதிய கட்டிடத்திற்காக கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், கட்டுநிதிப் பெறுமதியான ரூபா |

| | | |
|---|---|---|
| | | 1,856 மில்லியன் மற்றும் கம்பெரலிய செயற்திட்டத்தின் பெறுமதியான ரூபா 3,985 மில்லியனில் கிடைத்த பெறுமதியை நீக்கிய பின்னர் கட்டுநிதி கோரல் ரூபா 7,999 மில்லியன் ஆக காணப்பட்டது. அவற்றுள், கிடைத்த கட்டுநிதி ரூபா 6,776 அல்லது 84 சதவீதம் ஆகும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ஆரம்ப நிதியேற்பாடு ரூபா 31,100,000 ஆன மீண்டெழும் செலவின விடயங்கள் இரண்டிற்காக ரூபா 2,100,000 ஆன மேலதிக நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மாற்றப்பட்ட நிதியேற்பாடு செலவிடப்படாது முழுமையாக சேகரிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடுகள் முடியுமான அளவில் துல்லியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். | 03/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இணைப்புப் படிகள் அடிப்படைச் சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டமையின் அடிப்படையில் மற்றும் வெற்றிடமான பதவிகள் நிரப்பப்பட்டமையின் அடிப்படையில் சம்பளச் செலவினங்கள் அதிகரித்தமை, மேலதிக நேரப் படிகள் அதிகரித்தமை, எழுதுகருவிகளின் தேவைப்பாடு அதிகரித்தமை மற்றும் எழுதுகருவிகளின் விலைகளி அதிகரித்தமை, தபால் மற்றும் தொலைபேசியின் தேவை அதிகரித்தமை, மின்சார நுகர்வு அதிகரித்தமை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரித்தமை, ஆதனக் கடன்கள் |

| | | |
|---|---|---|
| | | கோரப்பட்டமையால் அதன் மீதான மாற்றல்கள் அதிகரித்தமை ஆகியன இடம்பெற்றன. |
| (ஆ) 03 மீண்டெழும் செலவினம விடயங்களுக்குரிய ரூபா 24,221,808 மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 8 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையிலான வீச்சில் ஏனைய செலவினம விடயங்களுக்கு நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடுகள் முடியுமான அளவில் துல்லியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். | 03/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இணைப்புப் படிகள் அடிப்படைச் சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டமை, ஏனைய செலவினங்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய சில செலவினங்கள் நிர்வாக செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டமை, உள்ளூராட்சி வீதவரிகள் உரிய காலத்தில் செலுத்தப்பட்டமை ஆகியவற்றின் காரணத்தால் கழிவு கிடைக்கின்றமையால் நிதியேற்பாடுகளை மாற்றும் தேவை ஏற்பட்டது. |

## 2.3 அதிகாரமளிக்கப்படாத செயற்பாட்டு நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) மஹர பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,082,245 தொகை காணாமற் போனமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(1)(ஆ) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலான இறுதி அறிக்கையின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய ஒட்டுமொத்த கண்காணிப்பு சாட்டப்பட்டுள்ள நான்கு | அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினை துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டியமை. | இணங்குகின்றேன். இது தொடர்பிலான நட்டத்தை அறவிடுவதற்காக அங்கீகாரத்தினை பெற்றுத்தருமாறு கோரி 2018.09.19, 2018.10.23, 2018.11.07 மற்றும் 2019.01.22 ஆந் திகதி நினைவுறுத்தற் கடிதங்களின் மூலம் உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், 2020 மே மாதம் வரையிலும் அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மினுவங்கொடை பிரதேச செயலகத்திற்குரிய 251-3437 ஆம் இலக்கமுடைய கெப் வண்டியானது 1999 ஆம் ஆண்டின் யூலை மாதம் விபத்துக்குட்பட்டிருந்தமை தொடர்பில் காப்பீட்டின் மூலம் அறவிட முடியாத நட்டமான ரூபா 189,360 இற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம், விபத்திற்குள்ளான வாகனத்தின் சாரதி இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவராவார். அதன் பிரகாரம், குறித்த சாரதிக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் அந்த நட்டத்தினை அறவிட முடியாதிருந்தது. | அரசிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டி யதரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த வாகனத்தின் விபத்து தொடர்பில் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டவாறு உள்ளது. வெளிநாடு சென்றிருந்த இரண்டாவது தரப்பினரான சாரதி நாடு திரும்பியுள்ளமைக்கான தகவல்கள் கிடைத்துள்ளதுடன், அந்த தகவல்கள் அரச சட்டத்தரணிக்கு 2019.05.10 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதன் தற்போதைய நிலைமை தொடர்பில் விசாரித்து அரச சட்டத்தரணிக்கு 2020.03.11 ஆந் திகதியிட்ட கடிதமொன்று மினுவாங்கொடை பிரதேச செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், சட்டமா அதிபர் திணைக்களம் துரிதமாக செயற்படாமையால் இந்த பணியை துரிதமாக நிறைவு செய்ய முடியாதுள்ளது என்பதை சுட்டிக்காண்பிக்கின்றேன். |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது 44 பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,192,596,320 தொகையான நிதியேற்பாடுகளில், செயற்திட்டத்தினை நிறைவேற்றாமையால் எஞ்சிய நிதியேற்பாடு ரூபா 2,990,023,207 அல்லது, ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் 36.5 சதவீதம் ஆகும். அவற்றுள் 06 அமைச்சுகளினால் பல்வேறு செயற்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,357,851,351 இற்கு உரிய கட்டுநிதி கிடைக்காமையால் ரூபா 2,843,950,296 அல்லது ஒதுக்கப்பட்ட நிதியின் 53 சதவீதம் பெறுமதியான செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | • இந்த நிதியேற்பாட்டிலான சேமிப்பிற்கு பிரதானமான காரணமாக அமைந்தமையாக ஆண்டின் இறுதியில் கம்பெரலிய செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் ஆண்டின் இறுதியில் பட்டியல்கள் தீர்க்கப்பட்டமை ஆகியவற்றுக்கு தேவையான பணத்தினை வழங்காமை ஆகும்.<br>• இந்த அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தல் இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் நீங்கலாக ஏனைய அனைத்து செயற்திட்டங்களுக்கும் தேவையான நிதியேற்பாடுகள் பிரதேச செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்களை விடுவித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணி வறிதாக்கப்பட்ட, சேவையை விட்டுச்சென்ற மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 2,694,690 ஆகும். இந்த மீதியினுள் 4 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,012,282 ஆகும். | நிலுவைக் கடன் மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் மீதிகள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், தற்போதைய நிலைமை தொடர்ரிர் 2020 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் உரிய தகவல்களை பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்காக 8 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 6,404 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 1,426,707,694 பெறுமதியான 4,975 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | கருத்து முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொம்பே பிரதேச செயலகத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ரூபா 73,419,698 பெறுமதியான 50 செயற்திட்டங்களுக்காக கூறுவிலை கோரல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | திறைசேரி செயலாளரின் BD/GPS/155/09/01/HA/-2019 ஆம் இலக்க மற்றும் 2019.11.20 ஆந் திகதிய கடிதத்தில் தற்காலிகமாக பணிகள் இடைநிறுத்தப்பட்டன. |
| (இ) | தொம்பே பிரதேச செயலகத்தில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 999,048 பெறுமதியான 2 செயற்திட்டங்களுக்காக மற்றும் ரூபா 13,243,301 பெறுமதியான 23 செயற்திட்டங்களுக்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், மேற்படி பணிகள் முன்னெடுக்கப்படாமையால் அந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாடு பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | ஜா-எல பிரதேச செயலகத்திற்கு மீளாய்வாண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட 360 செயற்திட்டங்களில் 77 செயற்திட்டங்கள் அல்லது ஒட்டுமொத்த செயற்திட்டங்களில் சுமார் 21 சதவீதமானவை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாடு பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | அப்போது நாட்டில் நிலவிய இரசியல் ஸ்திரமின்மை, நிதிப் பற்றாக்குறை மற்றும் ஒப்பந்ததாரரொருவர் முன்வராமை போன்ற காரணங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. |
| (உ) | ஜா-எல பிரதேச செயலகத்திற்கு கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 176 நிகழ்ச்சித்திட்டங்களில் 17 நிகழ்ச்சித்திட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், 07 செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் 26 சதவீதம் முதல் 40 சதவீதமான வீச்சினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | அப்போது நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த போதுமான காலம் இல்லாதிருந்தமையால் 17 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. 7 செயற்திட்டங்களின் ஆரம்ப பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய ஒப்பந்த சங்கங்களால் பட்டியல்கள் முன்றைக்கப்படாமையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சுகித புரவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஜா-எல பிரதேச செயலகத்திற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 70 செயற்திட்டங்களில், முழுமையாக பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின எண்ணிக்கை 24 மாத்திரம் ஆகும். | - மேற்படி - | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | ஜா-எல பிரதேச செயலகத்தில் நக்வமு லங்கா (இலங்கையை கட்டியெழுப்புவோம்) தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 7,018,000 ஆன நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | இதன் அடிப்படைப் பணிகள் நிறைவேற்றப்பட்டதுடன், இப்போது நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற நிலைமையின் அடிப்படையில் மற்றும் நிதி பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக செயற்திட்டத்தை நிறைவு செய்ய முடியாதிருந்தது. |
| (ஏ) | திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 72,807,508 பெறுமதியான 155 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 20 சதவீதமாக தொழிலாரம்பிப்பு முற்பணமாக ரூபா 14,561,502 தொகை 2019 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் பிரதேச சபையின் தலைவருக்க செலுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களிடையே ரூபா 7,325,678 ஆன முற்பணம் செலுத்தப்பட்ட 82 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிகள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பில் தகவல் கோரல் மற்றும் உரிய நிதி ஏனைய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் அது தொடர்பில் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள் 2020.02.12 ஆந் திகதி திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவரால் அதிக மழை, அதிக எண்ணிக்கையான செயற்திட்டங்களை நிறைவேற்றல், சபையில் நிலவும் மனிதவளப் பற்றாக்குறையால் சபையிலிருந்து கிடைத்த ஒத்துழைப்பு குறைவடைந்தமை ஆகிய விடயங்கள் காரணமாக நிறைவேற்றுதல் கடினமானது என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஐ) | மீரிகம பிரதேச செயலகத்தில் ரூபா 2,701,053 பெறுமதியான 06 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், அந்த பணத்தை ஏனைய செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட அமைப்பினால் உடன்படிக்கை காலத்தினுள் நடைமுறைப்படுத்தாமையால் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | கம்பெரலிய துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய மற்றும் நகர மட்டத்திலான வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் தற்காலிக கூரையை நிரந்தரக் கூரையாக மாற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 08 பிரதேச செயலகங்களின் 1,059 நலனாளிகளுக்காக ரூபா 134,884,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெறுதல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 05 பிரதேச செயலகங்களின் 190 நலனாளிகளுடன் ரூபா 22,635,000 பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெறுதல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 07 பிரதேச செயலகங்களின் 1,062 நலனாளிகளுக்காக ரூபா 130,903,965 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், பொருத்தமற்ற நலனாளிகளை தெரிவு செய்தல், வழங்கப்பட்டுள்ள நன்கொடைகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருத்தல், திட்டத்தின் பிரகாரம் பணிகள் நிறைவு செய்யப்படாமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக ரூபா 72,254,965 ஆன எஞ்சிய கொடுப்பனவு நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவின. | நலனாளிகளை தெரிவு செய்யும் போது உண்மையான தேவைப்பாடுடைய நபருக்கு நலன்களை வழங்கும் பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டியமை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | தற்காலிக கூரையை நிரந்தர | அங்கீகரிக்கப்பட்ட | பதில் |

| | | | |
|---|---|---|---|
| | கூரையாக மாற்றுவதற்காக அத்தனகல்ல பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்திற்கு ரூபா 145,190,000 ஆன நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 898 நலனாளிகளுக்கு ரூபா 86,539,762 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | நிதியேற்பாடுகளிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெறுதல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரத்தின் பிரகாரம் வீட்டு அலகொன்றிற்காக ரூபா 100,000 முதல் ரூபா 300,000 இடைப்பட்ட பல்வேறு பெறுமதிகளின் அடிப்படையில் வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த பெறுமதி எந்த கொள்கைவிதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை. | நலன்களை வழங்குவதற்காக திட்டவட்டமான மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைவிதிகள் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகளை தெரிவு செய்யும் பணிக்காக மக்கள் பிரதிநிதியின் தலையீட்டின் காரணமாக அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் வீடமைப்பு உதவி தேவையுடைய சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட 06 வீடுகளுக்காக வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரால் பொருத்தமான நலனாளிகள் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட வேண்டியமை. | இந்த நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச இணைப்புக் குழுவிற்கு மற்றும் உரிய அரசியல் அதிகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்காக அரசியல் அதிகாரத்தினால் ஈடுபடுத்தப்படாமையால் அவ்வாறான நலனாளிகளுக்கு உதவிகளை வழங்க முடியாது போனது. |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| கம்பஹா மாவட்டத்தின் சுயதொழில் முயற்சியாளர்களுக்காக மத்திய அரசின் நிதியேற்பாட்டின் கீழ் பொருட்களை பகிர்ந்தளிக்கும் நடைமுறையின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதிக்குரிய சுயதொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு மற்றும் சுயதொழில் உபகரணகளை வழங்குவதற்கு முறையே ரூபா 14,795,301 மற்றும் ரூபா 235,607,295 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட பல்வேறு குறைபாடுகள் 2020 செப்தம்பர் 04 ஆந் திகதி விரிவான முகாமைத்துவ அறிக்கையில் மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. | நிதிப்பிரமாணம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியமையும், செயற்திட்டத்தினை சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுத்தலும், உரிய சுற்றறிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துதலும், வளங்களின் முறையை வலுவூட்டி அதனை நாளதுவரையாக்குவதற்கும், பொருட்களின் பகிர்ந்தளிப்பு மற்றும் பின்தொடர்தல் நடைமுறையில் நிலவும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடங்கள் தொடர்பில் நான் இணங்குவதுடன், இந்த பணிகளை மிகவும் ஆக்கபூர்வமான முறையில் மேற்கொள்வதற்கு தொடர்ச்சியாக இது தொடர்பில் அறிவுரைகளை வழங்கி அதன் மூலம் சுயதொழிலில் ஈடுபடுபவர்களின் வாழ்க்கையை மிகவும் முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதன் மூலம் வறுமையை குறைப்பதற்கும், வருமானத்தை அதிகரிப்பதற்கான சலுகைகளை வழங்கவும் எதிர்பார்த்துள்ளளேன். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2019 இன் கீழ் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவின் 23 சமய வழிபாட்டுத் தலங்களில் ரூபா 9,430,000 செலவில் சூரியத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்த சூரிய தகடுகளிலிருந்து 2020 | கூடியளவு விரையில் தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு இணைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | இந்த தாமதத்திற்கு மின்சாரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரானது, குறித்த விஹாரைகளில் தற்போது வாசம் செய்யும் விஹாராதிபதிகளின் பெயர் அல்ல என்பதால், மின்சாரப் பட்டியலில் உள்ள பெயரை மாற்றுவதற்கு சில காலம் |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி முதல் மின்சார வழங்கலை தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு இணைக்கும் பணிகள் ஒரு வழிபாட்டுத்த தலத்தில் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | | எடுக்கின்றமை மற்றும் சூரிய ஒளி உள்ள தினங்களில் இந்த பரிசோதனைகளை மேற்கொள்ள மின்சார சபைக்கு நேர்ந்தமை மற்றும் மின்சார வழங்கலை சூரிய வலுக் கட்டமைப்பிற்கு இணைக்கும் போது நிகழும் தன்மை அதிகரிப்பதனை கட்டுப்படுத்த வேண்டியமை போன்றன காரணங்களாக அமைந்திருந்தன. |
| (ஆ) | திபுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவினுள் முறையற்ற விதத்தில் மற்றும் சேதமாக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டிருந்த 285 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணிகளில் சுமார் 140 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியானது நீர்ப்பாசன பிரச்சினைகள் காரணமான பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும், மூலதனப் பிரச்சினைகள் மற்றும் குறைவான அறுவடை மற்றும் குறைவான பயர் அடர்த்தி ஆகிய காரணங்களின் அடிப்படையில் காணிகள் குறைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி காணிகள் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த வேண்டியமை. | 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரதேச காணிகளின் பாவனையை திட்டமிடல், காணிப் பயன்பாட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் ஊடாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதன் போது உரிய பிரதேச செயலகப் பிரிவின் காணிப் பயன்பாட்டு பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்குரிய பொறுப்பு சாட்டப்பட்டுள்ள நிறுவனத்துடன் அந்த பிரச்சினைகளை கலந்துரையாடி, பரிந்துரைகளை பெற்று பிரிவிற்குரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டதுடன், 2015.06.11 ஆந் திகதி கம்பஹா மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் ஆலுவலகத்தில் குறித்த நிறுவனங்களை வரவழைத்து மேற்படி நடவடிக்கைகளுக்கான திட்ட அறிக்கையொன்று கையளிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (இ) | திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் மாஓயா இனை அண்மித்த காணிகளில் பெருமளவில் மணல் அகற்றுதல் இடம்பெற்றிருந்ததாகவும், | அனுமதியின்றி மணல் அகழ்வோருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மேற்புற மண் அகற்றப்பட்டமையால் அந்த பிரதேசம் வரண்டு போதல் மற்றும் நீர் சேரும் பெரும் குழிகள் உருவாகியிருந்தமை ஆகியன முறையற்ற காணிப் பாவனையின் பிரதான பிரச்சினைகளாக இனங்காணப்பட்டிருந்தன. | எடுக்க வேண்டும் என்பது. | |
| (ஈ) | ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிவுரைகள் மற்றும் சுற்றறிக்கை ஆகியவற்றுக்கு இணங்க செயற்படாமை மற்றும் தவறான கணக்கு வைத்தல் காரணமாக ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 06 பிரதேச செயலகங்களிடமிருந்து ரூபா 39,076,832 ஆன அறவிடப்பட வேண்டிய மீதியொன்று காணப்பட்டது. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை | கூடுதலாக செலுத்தப்பட்டவை அறவிடப்பட்டவாறு உள்ளது. |
| (உ) | 03 பிரதேச செயலகங்களின் 21 நபர்களுக்காக ஓய்வூதிய கோவைகள் இல்லாது ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கோவைகளை துரிதமாக தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓப்வூதியம் தொடர்பில் போதியளவான தகவல் இல்லாதிருந்தமையால் அதற்கு தேவையான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக ஓய்வுதியம் பெறுபவர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட போதிலும், போதுமான தகவல்கள் வழங்கப்பட்டிராமையால் தற்காலிக கோவையொன்றினை தயாரிக்க முடியாதுள்ளது. |
| (ஊ) | 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், 04 பிரதேச செயலகங்களின் ஓய்வூதியம் திருத்தப்படாத 778 கோவைகள் காணப்பட்டன. | துரிதமாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | ஜா – எல பிரதேச செயலகத்தின் ஓய்வூதியதாரரொருவருக்கு 2015 ஏப்ரல் முதல் யூலை | இரட்டை கொடுப்பனவுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை | ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியத் தரவுகளை உள்ளடக்கும் போது ஊழனந இல் இரு இலக்கங்களில் |

| | | | |
|---|---|---|---|
| | வரையான காலப்பகுதியில் இரட்டை ஓய்வூதியம் மற்றும் நிலுவை சம்பளம் ஆகியவை செலுத்தப்பட்டமையால் ரூபா 358,057 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் ஓய்வுதியம் பெறுநர் 2015 திசெம்பர் மாதம் மரணமடைந்துள்ளதுடன், அந்த கூடுதலாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவிட முடியாதுள்ளது. | இனங்கண்டு அவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தரவு உள்ளடக்கப்பட்டுள்ளமையால் இந்த இரட்டைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஏ) | ஓய்வூதியம் பெறுநர் ஒருவர் அல்லது தபுதாரரொருவர் அல்லது வேறு முறையொன்றில் ஓய்வூதிய நலனொன்றைப் பெறும் நபரொருவர் மரணமடைந்தவுடன் உடனடியாக கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த தகவல்கள் பிரதேச செயலகத்திற்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ஜா – எல மற்றும் மீரிகம பிரதேச செயலகங்களில் அதன் பிரகாரம் செயற்பட்டிராத 23 சநதர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | தாமதத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | துரிதமாக அறிவிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். |
| (ஐ) | மினுவங்கொட பிரதேச செயலகத்தின் வல்பிட்டவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சேவா பியச கட்டிடம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 300,000 செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த சேவா பியச பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபையின் இணக்கப்பாட்டினை கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள போதிலும், இதுவரை இணக்கப்பாடு கிடைக்கவில்லை. இணக்கப்பாடு கிடைத்த பின்னர் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீரிகம பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது 11 நில செவன அலுவலகங்களும், 2018 ஆம் ஆண்டின் போது 08 அலுவலகங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகங்கள் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் போன்ற மக்கள் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், அலுவலகத்திற்காக நீர் மற்றும் மின்சார வசதிகள் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நீர் மற்றும் மின்சார வசதிகளுக்காக நிதியேற்பாடுகளை பெற்றுக்கொண்டு அந்த வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | கிடைத்தி உச்ச நிதியேற்பாட்டினுள் நீர் மற்றும் மின்சாரம் வழங்குவதற்கு போதுமானது அல்ல. |
| (ஓ) | மீரிகம பிரதேச செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது 7 நில செவன அலுவலகங்களின் அத்திவாரங்கள் மாத்திரம் இடப்பட்டுள்ளதுடன், அதன் கம்பிகள் இற்றுப் போனவாறு உள்ளதுடன், அந்த பிரதேசத்தில் புதர் மண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்க முன்னர் அதற்காக போதுமான நிதியேற்பாடு உள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு அல்லாத போது பகுதியளவு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிதியேற்பாடுகள் கோரப்பட்டுள்ள போதிலும் கிடைக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மினுவங்கொட, திவுலப்பிட்டிய மற்றும் தொம்பே ஆகிய பிரதேச செயலக அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் 2012 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து மூடப்பட்டுள்ள 11 பாடசாலைகள் காணப்பட்டதுடன், அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூடப்பட்டுள்ள பாடசாலைகளை பிரதேச செயலாளரினால் கையேற்கப்பட்டு ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 19 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 5,227,396,892 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் அடைவுக் குறிகாட்டிகளை கருத்திற்கொள்ளும் போது அடைவதற்கு எதிர்பார்த்துள்ள 16 இலக்குகளில் இன்றளவில் 49 சதவீதமான செயன்முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்ட 04 இலக்குகளும், 50 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான முன்னேற்றத்தை பெற்ற 09 இலக்குகளும், 75 சதவீதத்தினை விட அதிக செயன்முன்னேற்றத்தை பெற்ற 03 இலக்குகளும் அவதானிக்கப்பட்டன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தியினை நோக்காக கொண்டு நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| கம்பஹா மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3,266 இல் 434 ஆன வெற்றிடங்கள் மற்றும் 12 பதவிகளின் மிகையொன்றும் நிலவியது. இந்த வெற்றிடமான பதவிகளினுள் உள்ள 144 கிராம உத்தியோகத்தர் பதவிகளக்காக 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை அடிப்படையிலான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு இதுவரையிலும் முடியாது போயுள்ளது. அதன் காரணமா மக்களுக்கு வழங்கும் சேவைகளின் செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வமான தன்மை ஆகியவற்றுக்கு பாதகமான முறையில் தாக்கமளிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |